People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

15.06.2024

**பத்திரிகைச் செய்தி**

## சாதி மறுப்பு திருமணம் நடத்தியதால் நெல்லையில் மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட் கட்சியினர் மீது கொலை வெறி தாக்குதல், அலுவலகம் அடித்து சூறையாடப்பட்டது.

## மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது

நெல்லையில் சாதி மறுப்பு திருமணம் நடத்தியதால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது நடத்திய கொடூர தாக்குதல் மற்றும் அலுவலகம் அடித்து சூறையாடப்பட்ட சம்பவத்தை மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை அருகே நம்பிக்கை நகரைச் சேர்ந்த மதன் குமார் (வயது 28) என்பவரும், பாளையங்கோட்டை பெருமாள்புரத்தைச் சேர்ந்த உதய தாட்சாயினி (வயது 23) என்பவரும் கடந்த 6 வருடமாக காதலித்து வந்துள்ளனர். வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த இவர்களின் காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் இதனால் நேற்று (13.06.2026) இருவரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரிடம் உயிருக்கு பாதுகாப்பு கேட்டு அலுவலகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். இருவரையும் முழுமையாக விசாரித்த பின்பு காதல் ஜோடிகளுக்கு நேற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகத்தில் முறைப்படி மார்க்சிஸ்ட் கட்சியின் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் மற்றும் பல்வேறு தலித் இயக்கங்களின் நிர்வாகிகள் முன்னணியில் திருமணம் நடந்துள்ளது.இன்று திருமணத்தை பதிவு செய்வதற்கான முயற்சிகள் நடந்த நிலையில் இதனை அறிந்த பெண் வீட்டைச் சேர்ந்த சுமார் 25க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பெண்ணை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல மாலை சுமார் 5 மணி அளவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அலுவலகத்திற்கு வந்துள்ளனர்.

பெண் வீட்டினரால் காதல் திருமண தம்பதியினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதை அறிந்தும், ஆணவக் கொலையை தடுக்கும் நோக்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் அலுவலகத்திற்கு பாதுகாப்பு கேட்டிருந்தனர். ஆணவக் கொலைகளை தடுப்பதற்காக உச்ச நீதிமன்றம் பல

வழக்குகளில் பல்வேறு கட்டளைகளை நடைமுறைப்படுத்த உத்திரவிட்டுள்ளது.இதன் அடிப்படையில் சாதி மறுப்பு திருமணம் செய்பவர்களுக்கு போலீசார் உரிய பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டும் என்பது காவல் துறையின் சட்ட கடமையாகும். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் பாதுகாப்பு கேட்டிருந்த நிலையில் இரண்டு போலீசாரை மட்டுமே அனுப்பி உள்ளனர். பாதுகாப்பற்ற நிலையை அறிந்ததால்தான் பெண் வீட்டார் பெரும் கும்பலாக திரண்டு கட்சி அலுவலகத்தில் புகுந்து காதல் தம்பதியினரை தேடிய போது அவர்கள் கிடைக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்து திட்டமிட்டு தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். அலுவலகத்தில் இருந்த கண்ணாடிகள் லைட்டுகள் மற்றும் சமையல் அறையில் இருந்த பிரிட்ஜ் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. நடந்த கொடூர தாக்குதலுக்கு நெல்லை மாவட்டத்தில் மற்றும் மண்டல அளவில் செயல்படும் உயர் போலீஸ் அதிகாரிகளின் மெத்தன செயல்பாடே காரணமாகும் எனவே உச்ச நீதிமன்ற கட்டளையை நடைமுறைப்படுத்த தவறிய போலீசாரின் செயல்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

உதய தாட்சாயினி மற்றும் மதன் குமார் இருவரும் கல்லூரி படிப்பு படித்தவர்கள். மேலும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சுயமாக முடிவு செய்து திருமணம் செய்ய உரிமை கொண்டவர்கள்.என்பதனை இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்துகிறது. எனவே அவர்களின் திருமணத்தை தடுப்பது சட்டப்படி குற்றமாகும். உயிருக்கு பாதுகாப்பு கேட்டும் தங்களுக்கு திருமணம் நடத்தி வைக்க உதவி கேட்டு வந்த அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் முறைப்படி விசாரணை செய்து அதன் பின்பு திருமணம் செய்து வைத்துள்ளார்கள்.இது அடிப்படை வாழ்வுரிமையை பாதுகாக்கும் செயலாகும் எனவே இது ஒரு ஒரு மனித உரிமை பணியாகும்.ஆணவக் கொலை முயற்சியை தடுத்து மனித உரிமைப் பணியில் ஈடுபட்டு பெண் வீட்டாரின் கொடூர தாக்குதலை தடுக்க வந்த இந்திய மாணவர் சங்க மாவட்ட செயலாளர் அருள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் வழக்கறிஞர் பழனி மற்றும் முருகன், முத்து சுப்பிரமணி ஆகிய 4 பேர் மீதும் கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் 4 பேர்களும் காயமடைந்தனர். இந்த சம்பவங்கள் அனைத்தும் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசாருக்கு முன்பாகவே நடந்துள்ளது. மேலும் காயமடைந்தவர்கள் நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நடந்து முடிந்த சட்டமன்றம், நாடாளுமன்ற தேர்தலில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் மபெரும் வெற்றி என்பது கூட்டணி கட்சி மற்றும் குடிமை


சமூகங்களின் இணைந்து எடுத்த முயற்சியே இந்த வெற்றிக்கு காரணமாகும்.இந்தியாவில் மற்ற மாநிலங்களில் கூட்டணி கட்சி சார்ந்தவர்களுக்கு ஆட்சியில் இடம் கொடுப்பது போல் தமிழ்நாட்டில் இடம் கொடுப்பதில்லை. ஆனால் குறைந்தபட்சம் கூட்டணி கட்சியினர் முன்னெடுக்கும் சமூக நீதிப் பணி அரசியல் அமைப்பு சட்டப் பாதுகாப்பு பணிகளின் போது அவர்கள் மீது போலீசாரால் போடப்படும் பொய் வழக்குகளை தடுக்க வேண்டும் மேலும் உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூக நீதிப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கூட்டணி கட்சியினருக்கு தொடர்ந்து நடந்து வரும் தாக்குதல், மிரட்டல்களை தடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாக தலையீடு செய்து தனது கண்டனத்தை பதிவு செய்ய வேண்டும்.மேலும் சாதிகளை கடந்து நடைபெறும் இதுபோன்ற சாதி மறுப்பு திருமணங்களை பாதுகாக்க தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் ஆணவக் கொலையை தடுப்பதற்கான தனிச் சட்டம் இயற்ற வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் கோருகின்றது.

மனித உரிமையை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தாக்குதலில் காயப்பட்டவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.நெல்லையில் செயல்பட்டு வரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு உரிய போலீஸ் பாதுகாப்பை வழங்கப்பட வேண்டும்.

சாதி மறுப்பு திருமணம் செய்தவர்களை கொலை செய்யும் நோக்கோடு பெண் வீட்டார் செயல்பட்டுள்ளனர். என்பதனை அறிய முடிகிறது எனவே காதல் திருமணம் செய்த இருவருக்கும் நிரந்தரமான பாதுகாப்பை வழங்கியும், இவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு பணியும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசை மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது.

இப்படிக்கு



(ஹென்றி திபேன்)
நிர்வாக இயக்குநர்
மக்கள் கண்காணிப்பகம்